

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 154 /2017
தேதி : 07.12.2017

**உள்ளாட்சித் தேர்தலையொட்டி**
**தமிழகம் முழுவதும் போலி வாக்காளர்கள் களையப்பட வேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் வலியுறுத்தல்.**

ஆர்.கே நகர் இடைத்தேர்தலுக்காக வெளியிடப்பட்டிருக்கும் இறுதி வாக்காளர் பட்டியலில், மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை, 2,28,234 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையானது, 2016, மே மாத எண்ணிக்கையான 2,54,497 வாக்காளர்களிலிருந்து 26,263 குறைவாகவும், 2017, ஏப்ரல் மாத எண்ணிக்கையான 2,62,721 வாக்காளர்களிலிருந்து 34,487 குறைவாகவும் இருக்கிறது.

எட்டுமாத இடைவெளியில் சுமார் 13 சதவிகித வாக்காளர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பது வியப்பாக உள்ளது. இறந்தவர்கள், வேறு தொகுதிக்கு வீடு மாறியவர்கள் என்று நீக்கப்படவேண்டியவர்கள் ஓரளவு இருந்தாலும், போலி வாக்காளர்கள் பட்டியலில் இருந்திருந்தால்தான் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் நீக்கம் நடந்திருக்கும் என்பது தெளிவாகிறது. மேலும் ஐந்தாயிரத்திற்கு மேற்பட்ட போலி வாக்காளர்களை நீக்கக்கோரி, உயர்நீதி மன்றத்தில் வழக்கும் தற்போது விசாரணையில் உள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் தடைசெய்யப்பட்ட ஆர்கே நகர் இடைத்தேர்தல் ஒருவேளை நடந்திருந்தால், தற்போது நீக்கப்பட்ட வாக்காளர்களும் வாக்களித்திருப்பார்கள். அதையொட்டி வந்த தேர்தல் முடிவும் நியாயமற்றதாகத்தான் இருந்திருக்கும். ஏனென்றால் சுமார் 35,000 போலி வாக்காளர்கள் என்பது, ஒரு தொகுதியின் உண்மையான வாக்காளர்களின் தீர்ப்பை மாற்றியமைக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணிக்கை. இதுபோல், நடந்து முடிந்த தேர்தல்களில் எல்லாம், போலி வாக்காளர்கள் நீக்கப்படாமல் வாக்களித்து இருந்திருந்தால், வேட்பாளர்கள் பெற்ற வெற்றியின் உண்மைத் தன்மை கேள்விக்குறியாகத்தானே இருந்திருக்கும்?

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



போலி வாக்குகளால்,மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில், ஒருவர் வெற்றிவாய்ப்பை இழக்க நேரிட்டால், அதற்கு அவரது ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டதாகத்தானே அர்த்தம்?

தற்போது போலி வாக்காளர்களை நீக்கியிருப்பது ஒருபுறம் மகிழ்ச்சி அளித்தாலும், இத்தனை போலி வாக்காளர்களை முறையாக சரிபார்க்காமல் பட்டியலில் சேர்த்தது, அரசு நிர்வாகத்தின் அலட்சியம் என்றே கருதவேண்டியுள்ளது. மேலும், சில அரசியல் கட்சிகளும், தங்களுக்கு சாதமாக இருக்கவேண்டும் என்பதற்காக, முறைகேடாக வாக்காளர்களைச் சேர்க்க முனைவதும் தண்டிக்கப்படவேண்டிய ஜனநாயகப் பிழையாகும்.

எனவே, அதிகபட்ச கவனத்தோடும், முறைகேடுகளுக்கு இடமளிக்காமலும், தகுந்த உண்மையான ஆதாரங்களுடன் மட்டுமே புதிய வாக்காளர்கள் சேர்க்கப்படுவதை தேர்தல் ஆணையம் உறுதிசெய்ய வேண்டும். வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக தமிழகம் முழுவதும் இதுபோன்ற போலி வாக்காளர்கள் நீக்கப்படவேண்டும். வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு ரேஷன் அட்டைகள் ஆதார ஆவணமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.ஆனால் லட்சக்கணக்கில் போலி ரேஷன் கார்டுகள் இருப்பதும் தெரியவந்துள்ளது. எனவேk இத்தருணத்தில் போலி ரேஷன் கார்டுகளும் ஒழிக்கப்படவேண்டும் என்றும் அரசுக்கு வேண்டுகோள் வைக்கிறேன். அதோடு, முறைகேடாக வாக்காளர்களைச் சேர்க்கும் அதிகாரிகளுக்கும், சேர நினைக்கும் வாக்காளர்களுக்கும் கடுமையான தண்டனை கிடைக்கச் செய்யவேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

பல்வேறு தேர்தல் முறைகேடுகளோடு சேர்த்து, போலி வாக்காளர்கள் என்பதும் களையப்பட்டு, ஜனநாயகம் களங்கப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்றும் சமக சார்பில் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com